Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன். 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 4

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 7 ஆம் நாள் ஷவ்வால் 4 (19-2-64) புதன்கிழமை இதழ் 9

உரம்

சகலவிதமான பயிர்களுக்கும்
வேண்டிய பசளை
பெற்றுக்கொள்ளலாம்

ஆ. மா. கிருஷ்ணபிள்ளை
அளவெட்டி.

# தமிழரசுக் கட்சியின் குறைந்த கோரிக்கை

## எதிர்க்கட்சியினருடன் அரசாங்கம் ஆலோசனை

### மந்திரிகள் இன்று கூடுவார்கள்

கொழும்பு, செவ்வாய்

**மொழிப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் சில எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் தமிழ்த் தலைவர்களுடனும் மந்திரிகள் சமீபத்தில் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து நாளை மந்திரிகள் கலந்தாலோசிக்கவிருப்பதாக அறியப்படுகிறது.**

**சென்ற இருவாரங்களாக பல மந்திரிகள் எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் தமிழ்த்தலைவர்களுடனும் தமிழ்ப்பேசும் மக்களின் பிரதிநிதிகளுடனும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மொழிப்பிரச்னையால் எழுந்துள்ள முட்டுக்கட்டைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.**

அரசாங்கத்தினாலும் உள்விவகார அமைச்சினாலும் நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டி சமர்ப்பித்துள்ள அறிக்கையையும் மந்திரிகள் பரிசீலனை செய்வார்களென எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், திரு. இராசமாணிக்கமும் நிதி அமைச்சருடன் மொழிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் கையாள்வது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியதாக விபரம் தெரிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் பல விஷயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் எதுவித முடிவும் செய்யப்படவில்லையெனவும் தெரியவருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக அமைந்துள்ளது என விவரிக்கப் பட்டுள்ளது.

#### நாகநாதன் அபிப்பிராயம்

பேச்சுவார்த்தைகள் பற்றியும் தெரிவிக்கப்படும் யோசனைகள் பற்றியும் நாம் சந்தேகக் கண்கொண்டு நோக்கினால் அதுகுறித்து எம்மைக் குறைகூறக் கூடாது' என டாக்டர் நாகநாதன் இது குறித்து அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்.

டாக்டர் நாகநாதன் மேலும் தெரிவித்ததாவது:

ஐயம் இருந்தாலும், அரசாங்கத்தின் மனத்திலும் சிங்கள மக்களின் மனத்திலும் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகுவதை நாம் விரும்புவோம்.

ஜாதிக விமுக்திப் பெரமுனையைத் தவிர மற்றக் கட்சிகளெல்லாம் மொழிப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் விருப்பம் கொண்டுள்ளன'

தமிழ்மொழி விசேஷ சலுகைகள் சட்டம் சம்பந்தமாகவும் பிரதேச சபைகள் சம்பந்தமாகவும் தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகள் சம்பந்தமாகவும் இப்போது ஆராயப்பட்டுவருவதாக அறியப்படுகிறது. (6-ம் பக்கம் பார்க்க)

## நியாயமான அளவு தமிழ்மொழி உபயோகம் — நிதிமந்திரி உத்தரவு

உத்தியோகமொழியை அமுல் செய்வதில் தீவிரவாதம் காட்டக்கூடாதென நிதிமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்ன நிதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எச். ஜி. சமரக்கொடிக்கு அனுப்பியுள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார். சிங்களத்தை உத்தியோக மொழியாக்கிக்கொள்ளும்போது தீவிரவாதம் காட்டாமலும், எந்த ஒரு பிரஜையினதும் மனதைப் புண்படுத்தாதவகையிலும் அதைக் கையாளவேண்டுமென்றும் நிதிமந்திரி தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் மொழிக்கொள்கைப்படி தமிழுக்கும் நியாயமான இடம் கொடுக்கப்படவேண்டும் எனவும் மந்திரி நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள குறிப்பில் தெரிவித்துள்ளார். தீவிரவாதம் காட்டக்கூடாது என சகல அரசாங்க ஊழியர்களையும் கேட்டுக்கொள்ளுமாறும் நிதிமந்திரி அக் குறிப்பில் தெரிவித்துள்ளார். மந்திரி தெரிவித்துள்ள யோசனையை] அரசாங்க ஊழியர்களுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு திரு. சமரக்கொடி திறைசேரியில் உள்ள உத்தியோகமொழி அமுல் பொறுப்பதிகாரிக்கு தெரிவித்துள்ளார்.

மாவட்ட சபைகள் அமைப்பதுபற்றி ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டி தனது அறிக்கையை உள்நாட்டு மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியாவிடம் சமர்ப்பித்துள்ளது. இது சம்பந்தமாக சில மந்திரிகளுக்கும், எதிர்க்கட்சி தலைவர்களுக்கும், (6-ம் பக்கம் பார்க்க)

## புரட்சி

லண்டன், பெப். 18

மேற்கு ஆபிரிக்க நாடான கபானில் இராணுவப் புரட்சி நடைபெற்றதைத் தொடர்ந்து ஆட்சியை இராணுவம் கைப்பற்றிவிட்டதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்புரட்சி நேற்றிரவு நடைபெற்றது. ஜனாதிபதி இல்லத்தையும் சட்டசபை அங்கத்தினர்களின் இல்லங்களையும் புரட்சியாளர்கள் சூழ்ந்து கொண்டுள்ளனர் என்று இன்றிரவு கிடைத்த கடைசிச் செய்திகள் கூறுகின்றன.

கபான், 1962-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தான் அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரமடைந்தது. ஜனத்தொகை: 4,50,000.

## காணமற்போன இந்திய படைவிமானம்

### 13 உயர் அதிகாரிகளின் நிலைபற்றித் தெரியவில்லை

புதுடில்லி, பெப். 18

நேற்று பிற்பகல் மூன்றுமணிக்கு ஸ்ரீநகரிலிருந்து உதம்பூருக்கு புறப்பட்டுச் சென்ற இந்திய படைவிமானமொன்று காணமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விமானத்தில் உயர்தர விமானப் படை அதிகாரிகளும் ஐந்து விமானப்படை ஊழியர்களும் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர்.

இந்த விமானம் நேற்று பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீநகரிலிருந்து புறப்பட்டுச் சென்றதைத் தொடர்ந்து 33 நிமிட நேரத்துக்குப் பின்னர் விமானத் தொடர்புகள் அற்றுப் போய்விட்டன. விமானத்தைத் தேடும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

## மார்ச் 23ம் திகதி 25 நாட்டு தூதர்கள் சந்திப்பர்

### மண்டலசார்பற்ற மகாநாட்டுக்குமுன்னோடி

கொழும்பு, செவ்வாய்

வருகிற மார்ச் மாதம் 23-ந் திகதி மண்டலசார்பற்ற 25 நாடுகளின் தூதர்களடங்கிய மகாநாடு கொழும்பில் நடைபெறும். மண்டலசார்பற்ற நாடுகளின் உச்சித்தலைவர்கள் மகாநாட்டிற்கான முதல்கட்டமாக இது அமையும்.

பெல்கிரேட் மகாநாட்டில் கலந்து கொண்ட இந்த நாடுகளுக்கு யூகோஸ்லேவியா, எகிப்து, இலங்கை ஆகியநாடுகள் அழைப்பை விடுத்திருக்கின்றன. பொலிவியா, பிரேஸில், ஈக்வடோர் ஆகியநாடுகள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளவும் அழைக்கப்பட்டிருக்கின்றன.

மகாநாடு சம்பந்தமாக கெய்ரோவிலும், பெல்கிரேடிலும் பேச்சுவார்த்தை நடத்திய இலங்கை வெளிநாட்டுக்காரியதரிசி திரு. ஜி. எஸ். பீரிஸ் இதுபற்றி மேலும் பேச்சு நடத்துவதற்காக ரங்கூனுக்குச் சென்றிருக்கிறார்.

மண்டலசார்பற்ற நாட்டு தூதர்களின் மகாநாடு சம்பந்தமான ஒழுங்குகளைச் செய்யும் பொருட்டு இலங்கை அரசாங்கம் இரண்டு பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது. வெளி விவகார அமைச்சைச் சேர்ந்த திரு. ஆர்தர் பஸநாயக்கா, திரு. என். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவருமே அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளாகும்.

தமிழ்நாட்டில்

## காங்கிரஸுக்கு அமோகவெற்றி

### நகரசபைத் தேர்தல் முடிவுகள்

சென்னை, பெப். 18

தமிழ்நாட்டில் நேற்று நடைபெற்ற 28 நகரசபைகளுக்கான தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது. இன்றிரவு கிடைத்த தேர்தல் முடிவுகளின்படி காங்கிரஸ் கட்சி 46 ஸ்தானங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் 4 ஸ்தானங்களையும் கைப்பற்றியுள்ளன. தமிழ்நாட்டில் நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களில் இதுவரை வெளியான சில முடிவுகள் வருமாறு:

இராமநாதபுரம்: காங்கிரஸ்-2, போவேட்புளக் -1; காரைக்குடி: காங்கிரஸ் - 2, சுதந்திரா-1; விருதுநகரில் மூன்று சுயேச்சையாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர். சிவகாசி: காங்கிரஸ் 2, சுயேச்சை - 1; ஸ்ரீ வல்லிபுத்தூர்: காங்கிரஸ் - 6, சுயேச்சை 2; அருப்புக்கோட்டை: சுயேச்சை - 5, காங்கிரஸ் - 1; ராஜபாளையம்: காங்கிரஸ் - 2; கடலூர்: காங்கிரஸ் - 4, தி. மு. க - 1, சுயேச்சை - 1; திருச்சிராப்பள்ளி: காங்கிரஸ் 3, தி. மு. க- 2, சுயேச்சை - 1; ஸ்ரீரங்கம்: காங்கிரஸ் - 6; கரூர்: காங்கிரஸ் - 7; சுயேச்சை - 1; புதுக்கோட்டை: காங்கிரஸ் - 7, தி. மு. க - 1, சுயேச்சை - 1.

மணிவாக்கு

ஆயிரம் ஆண்டுகள் பிரார்த்தனை செய்வதைவிட, ஒருமணி நேரம் மௌனமாக தியானித்து, இறைவன் கூறுவதைக் கேட்பது மேலானதாகும்.

— திருக்குரான்

ஈழநாடு
EELA NADU
ELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு
மாசி 7 தி. (19-2-64)

# கொழும்புத் துறைமுக பிரச்னை

கொழும்புத் துறைமுகத்தில் மேலும் ஆயிரம் தொழிலாளர்களைப் புதிதாகவேலைக்கு நியமிக்கப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது. ஆனாலும் அந்தத் துறைமுகப் பிரச்னையும் நாட்டின் சங்கடமும் இதனால் தீரமுடியுமா என்பது மிகவும் சந்தேகம்.

கொழும்புத்துறைமுகமே இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதிக்கு தலைவாசல் போல் ஏகபோகமாக இருக்கச் செய்யப்பட்டுள்ளது. அந்நிய ஆட்சிக்காலத்தில் அவர்கள் தங்கள் வசதிக்கேற்பச் செய்திருந்த இந்த ஏற்பாட்டை நாடு சுதந்திரமடைந்த பின்னரும் இலங்கையில் இதுவரை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மாற்றம் செய்யவில்லை. இதை "தேசிய"மயமாக்கியபின் நிலைமை மோசமாகியுள்ளது.

நாட்டின் வடபகுதியில் உள்ள துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யாமல் புறக்கணிக்கப்படுகின்றன. இதன் விளைவாக கொழும்புத்துறைமுகத்திலுள்ளவர்கள் தமது நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரத்தை அடிக்கடி ஸ்தம்பிக்கச் செய்வதாகவுள்ளது. நாட்டிலுள்ள இதர தொழிலாளர்களைவிட அதிக ஊதியம்பெறும் கொழும்புத் துறைமுகத் தொழிலாளர் இதர தொழிலாளர்களைவிட மிகக் குறைந்த நேர வேலையே செய்கின்றனராம். இந்த நடவடிக்கைகள் காரணமாக வெளிநாட்டிலிருந்து பொருட்களை இலங்கைக்கு ஏற்றிக் கொண்டுவரும் கப்பல்கள் இருபதுசதவீதம் அதிகமாகக் கட்டணம் கோருகின்றன. சில கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்துக்கு வராமலே சென்றுவிடுகின்றன. இந்நிலை நீடித்தால் கப்பல்கள் இலங்கைக்கு வராமல் தென்னிந்தியத் துறைமுகங்களான கொச்சிக்கும் சென்னைக்கும் சரக்குகளைக் கொண்டு சென்று இறக்கக்கூடும். பின்னர் வத்தைகளில்தான் அவை இங்குள்ளசிறு துறைமுகங்களுக்குக் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய நிலைஏற்படலாம். இதனால் வீண்தாமதமும் செலவும் ஏற்படுவதுடன் விலைவாசிகளும் அதிகரிக்கும்.

ஏதோ ஒரு காரணத்துக்காக காலித்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் அரசாங்கம் கொழும்பைவிட அதிக வசதியும் இயற்கையாய் அமைந்துள்ளதுமான திருக்கோணமலைத் துறைமுகத்தின் உபயோகத்தைக் காலங்கடந்த பின்னராவது உணர்ந்துள்ளது ஓரளவு மகிழ்ச்சிக்குரியது. என்றாலும் பல துறைமுக வசதிகளையுடைய இலங்கை ஒன்றிரண்டு துறைமுகங்களை மட்டும் நம்பியிருப்பது நல்லதல்ல.

வடபகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட பலதுறைமுகங்கள் சிறந்த முறையில் உபயோகிக்கக் கூடியதாக இருக்கின்றன. இத்துறைமுகங்களில் ஒன்றான காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை பலரும் பல தடவைகளிலும் வற்புறுத்தியிருக்கின்றனர். என்றாலும் அது தமிழ்ப்பகுதிகளில் இருப்பதால் வகுப்புவாத கண்ணோட்டத்துடன் ஆட்சிபீடம் கவனித்ததன் காரணமாக அதை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லைபோலும். கொழும்புத்துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள நிலையால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்திலாவது காங்கேசன் துறைத்துறைமுகத்தின் அவசியத்தை உணர்ந்து துரிதமாக அதை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும். இதுவரை செய்துவந்த தவறை இனியும் செய்யாமல் நாட்டின் நலனை மட்டும் மனதில் கொண்டு வடபகுதியிலுள்ள துறைமுகங்களைக் குறிப்பாக காங்கேசன் துறை துறைமுகத்தையாவது அபிவிருத்திசெய்ய அரசாங்கம் முன்வருமா? மற்றக்கட்சிகளும் தேசிய நன்மையைக் கருதி இதை வற்புறுத்த இது தக்க தருணமாகும்.

# "சிறுபான்மையினர் அடிப்படை உரிமைக்கு உத்தரவாதம் தேவை"

## தமது தவறை சுட்டிக்காட்டும் சோல்பரி பிரபு

"இந்தியா, பாகிஸ்தான், மலாயா, நைஜீரியா போன்ற நாடுகளின் அரசியல் சாஸனங்களில் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுபோல் இலங்கையின் அரசியல் சாஸனத்திலும் உத்தரவாதமளிப்பதற்கு சோல்பரி அரசியல் கமிஷன் சிபார்சு செய்யத்தவறியது வருத்தத்துக்குரியதென இப்பொழுது நான் நினைக்கிறேன்."

இவ்வாறு இலங்கையின் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்தவரும் இலங்கையின் அரசியல் திட்டத்தை வகுத்த அரசியல் திட்டக் கமிஷனின் தலைவருமான சோல்பரி பிரபு ஒரு நாலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கை ஒரு பிளவுபட்ட நாடு" என்று திரு. பி. எச். ஃபார்மர் என்பவர் ஆங்கிலத்தில் எழுதி இன உறவு கழகத்தின் ஆதரவினல் வெளியிடப்பட்டுள்ள இந்நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் சோல்பரிப் பிரபு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"பிரிட்டிஷ் காமன்வெல்த், ஏகாதிபத்தியம் ஆகியவற்றுள்ளிருக்கும் பல்வேறு இனங்களுக்கும் சுதந்திரம் அளிக்கப்படும்போது சிறுபான்மையினர் பிரச்னை சிக்கலாய் விளங்குகிறது. 1944-ம் ஆண்டு இலங்கை அரசியல் சீர்திருத்தம் பற்றி எனது தலைமையில் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அப்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சிறுபான்மைத் தமிழர்களுக்கும், பெரும்பான்மை சிங்களவருக்குமிடையே உள்ள உறவு, சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்னைகளில் மிகவும் கஷ்டமானதுஎன கமிஷன் அறிக்கையில் வருணிக்கப்பட்டிருந்தது. சமிஷனின் அறிக்கையில் இந்த சிறுபான்மையினர் பற்றி குறிப்பிடத்தக்க அளவு இடமளிக்கப்பட்டிருந்ததுடன், தங்கள் சொந்தநன்மையைப்பொறுத்து மட்டுமின்றி, நாட்டின் முழு நன்மையையும் கருதி சிறுபான்மையினரின் நன்மையைப் பாதுகாப்பதின் அவசியத்தை இலங்கை அரசாங்கம் உணர்ந்திருந்தது பற்றி கமிஷனுக்குத் திருப்தி ஏற்பட்டது. நாங்களே இதற்கு ஒரு வழி வகுத்துக் கொடுக்க முடியாது போனல் காலகதியில் அவர்கள் தாங்களாகவே ஒரு வழியை வகுத்துக் கொள்வார்கள் என கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இது உண்மை என்பதை சமீபத்திய வருடங்கள் உணர்த்துகின்றன.

ஆனல் இலங்கையின் முதலாவது ,பிரதமர் திரு. டி.எஸ். சேனநாயக்கா உயிரோடிருந்திருப்பின் 1958-ம் ஆண்டின் திடுக்கிடும் சம் வங்களும், தற்போதைய தமிழர்-சிங்களவர் நெருக்கடி நிலையும் ஏற்பட்டிருக்கும் என நாம் நம்பவில்லை' 1945-ம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை சட்டசபையில் "இந்நாட்டின் நலனுக்கு தமிழர்கள் அத்தியாவசியமானவர்கள்" என்ற பிரிட்டிஷ் யோசனையை திரு. சேனநாயகா சிபார்சு செய்தார். தூரதிருஷ்டியற்ற சிங்கள அரசியல்வாதிகள் மத, மொழி, கலாச்சார வித்தியாசத்தைத் தூண்டி விட்டுப் பயனடைவதற்கு மாருக ஐக்கிய இலங்கையை அவர் மனதால் கேட்டிருந்தார்" இலங்கையில் நடைபெற்றிருக்கும் சம்பவங்கள் எனக்கும், சோல்பரி கமிஷனின் சில அங்கத்தவர்களுக்கும் ஏமாற்றம் அளித்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. கமிஷன் இலங்கையிலிருந்தபோது சில சிங்கள அரசியல்வாதிகள் சிங்களவரின் ஐக்கியம் பற்றியும், தமிழர்களை நசுக்க வேண்டுமென்று பயமுறுத்தியும் நிகழ்த்திய பேச்சுக்கள் அவர்களுக்கும், இதர சிறுபான்மையினருக்கும் அரசியலமைப்பில் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்ற உண்மையை உணர்த்தியது. சிறுபான்மையினருக்கு சோல்பரி அரசியலமைப்பில் தேவையான பாதுகாப்புக்கள் அளிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தியா, பாகிஸ்தான், தற்போதைய நிலைமையைப் பார்க்குமிடத்து' மலேஷியா, நைஜீரியா போன்ற நாடுகளிலிருப்பதைப் போல் அடிப்படை உரிமைக்கு உத்தரவாதமளிக்கும் சிபார்சுகளைக் கமிஷன் செய்திருக்க வேண்டும் என இப்போது கருதுகிறேன்."

# தேசிய ஒற்றுமை

## ஆங்கில தினசரிகள் கருத்து

"காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தேசிய ஒற்றுமைபற்றி எவ்வித கொள்கையுடையவர் என்பதுபற்றியும், அதற்கு இணக்கமாக என்னென்னவற்றைத் தெரிவித்துள்ளார் என்பதுபற்றியும், பிரதமருக்கும் மந்திரிசபைக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கும், பார்லிமெண்டுக்கு வெளியேயுள்ள அக்கட்சி அதிகாரிகளுக்கும் தெரிவிக்க விரும்புகிறோம்" என்று குறிப்பிட்டு காலஞ் சென்ற பிரதமரின் சில பேச்சுக்களை எடுத்துக்காட்டும் வகையில் 17-2-64 'டெயிலி மிரர்' பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் அமைந்துள்ளது அந்த ஆசிரியத் தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

கடந்த காலத்தின் குரல் ஒன்றுக்கு இன்றைய மக்கள் குரலான இந்த பத்தி தலைவணங்குகிறது.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தேசிய ஒற்றுமைபற்றிய குரலே அந்தக் கடந்தகாலக் குரலாகும்.

1957-ம் ஆண்டு அக்டோபர் இரண்டாந் திகதி வெளியான 23-ம் இலக்க அரசாங்கத்தின் பத்திரிகையான "சிறிலங்கா" விலிருந்து சிலவற்றை எடுத்துக்கூற விரும்புகிறோம்.

"பல இனத்தவரும் பல சமயத்தவரும் வாழும் ஒரு நாட்டில் (அநேகமாக எல்லா ஆசிய நாடுகளிலும் பல இன, பல மத மக்களே வாழ்ந்துவருகிறார்கள்)பெரும்பான்மை இனத்தவர்கள் சிறுபான்மையினரை அழித்தொழித்துவிட வேண்டுமா; அல்லது அந்த நாட்டில் வாழையடி வாழையாக வாழ்ந்துவரும் சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கீகரித்து அதை அவர்களுக்கு அளிக்க வேண்டுமா" என்று பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா அண்மையில் தன்னைப் பேட்டிகண்ட லங்கா ஜாதிக சங்கமயவைச் சேர்ந்த தூதுகோஷ்டியினரிடம் கேட்டார்.

"பௌத்தர்கள் அல்லாத சிங்களவர்களை நீக்கிவிடும்படியும், இறுதியாக பௌத்த சிங்கள இராச்சியம் ஒன்றை இந்த நாட்டில் நிறுவும்படியும் பௌத்த சிங்கள தீவிரவாதிகள் கேட்க மாட்டார்களா? அவர்கள் கேட்கும்போது நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளப் போகிறோமா?" என்று மேலும் பிரதமர் தூதுகோஷ்டியினரிடம் வினவினர்.

"தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் ஒரே பார்லிமெண்டின் கீழ் ஐக்கிய இலங்கை ஒன்றை தான் நிறுவியுள்ளதாகவும் அந்த அமைப்பில் சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோக மொழியாக இருக்கும் அதே சமயத்தில் தமிழர்களுக்கும் தங்கள் மொழியை நியாயமான அளவு உபயோகிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது எனவும் பிரதமர் விளக்கம் தெரிவித்தார்.

"சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோகமொழியாக இருக்கவேண்டுமென்பதும், தமிழுக்கு நியாயமான உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பதுமே அவரின் என்றைய கொள்கையுமாகும். சிங்கள மகாசபையின் தலைவராக இருக்கும் போதும் அந்தக் கொள்கையுடனேயே அவர் இருந்தார். எம். ஈ. பி. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இந்தக் கொள்கை குறிப்பிடப்பட்டிருந்தது. பிரேதசசபைகள் மூலம் சமஷ்டிக் கட்சியினருக்கு சில சலுகைகளை அளித்து ஐக்கிய இலங்கைக்கு அவர் அத்திவாரம் அமைத்துள்ளார்.

"பிரதேசசபைகள் திட்டம் புதிய யோசனை அல்லவென்றும் தான் எப்பொழுதும் பிரதேசசபைக் கொள்கையைக் கொண்டிருந்தார் எனவும் பிரதமர் தூதுகோஷ்டியினருக்கு விளக்கத் தெரிவித்திருந்தார். கிராமசபைச் சட்டத்தைப்போலவே பிரதேச சபைச் சட்டமும் இருக்கும் எனவும், பிரதேசசபைகளுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும் பிரதேசசபைகள் இயற்றும் சட்டங்கள் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படவேண்டும் எனவும் பிரதமர் மேலும் விளக்கம் தெரிவித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன்

## எழுதுவது

இப்போது யாழ்ப்பாணத்திலே பல 'கென்னடி'கள் தோன்றி வருவதாக ஓரன்பர் தெரிவித்தார். பல குழந்தைகளுக்கும் அந்தப் பெயரை வைக்கின்றார்களாம்.

செல்வம், பதவி, புகழ் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கி, வெள்ளையரல்லாதாரின் சம உரிமைக்காக உயிர்த்தியாகம் செய்த அவரது மதிப்பு நம் யாழ்ப்பாணத்திலும் பெரிதும் உயர்ந்துள்ளதற்கு இது ஓர் அத்தாட்சி

சமீபத்தில் சென்னைக்குச் சென்றிருநதபோது, அங்கு பலரும் கென்னடியைப் போற்றுவதைக் கேட்டேன். சீனப் படையெடுப்பு ஆபத்திலிருந்து இந்தியாவைக் காத்தது அவர் தானென்று பலரும் அவரைப் போற்றுகின்றார்கள்.

* * *

கென்னடிக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ்ப்பாணத்திலே சில சினிமா செய்திப்படங்களை இப்போது காட்டுகின்றார்கள்.

மிக இளம் பிராயத்தில் ஜனதிபதியாகிய கென்னடிக்கு பலவித உபாதிகளாம். வாழ்க்கையில் பாதிநாள் முதுகுவலி முதலியவற்றால் அவர் அவதிப்பட்டுவந்ததாயும், ஆனாலும் இதைக் காட்டிக்கொள்ளாமல் தன் கடமைகளைச் செய்து வந்ததாயும் அவரது சகோதரர், அவரைப் பற்றிய ஒரு புத்தகத்துக்கு எழுதியுள்ள முகவுரையில் தெரிவிக்கின்றார்.

அவர் பதவியேற்றபோது செய்த பிரசங்கத்தைக் கேட்டேன். தேசிய கௌரவத்தை விட மனித கௌரவத்தைக் காப்பாற்றுவதிலேயே தாம் அதிக கவனம் செலுத்தப் போவதாகவும், ஏழ்மை, நோய், பஞ்சம், பட்டினி முதலிய விரோதிகளை எதிர்த்துப் போராடி வெற்றிகாணவேண்டும் என்றும், அந்த இளம் வீரர் முழங்கியது என் உள்ளத்தைத் தொடட்டது. ஒரு நொடிக்குள் ஒரு அழகான குடும்பம் எப்படிச் சிதைந்து விட்டது!

* * *

'மனித கௌரவம்' என்று அவர் கூறியதைக் கேட்டதும் இங்கு தலைமன்னர் காவற்கூடத்தை நேரில் பார்த்த ஓர் அன்பர் கூறியதுதான் எனக்கு உடன் நினைப்பு வந்தது.

தலைமன்னர் காவற்கூடத்தில் அடைபட்டுள்ள சுமார் 60 அல்லது 70 பேரும், எப்போதும் பசியால் துடிப்பதாயும், அவர்களுக்கு மோசமான உணவே கொடுபடுவதாயும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு கும்பனித்தெரு முகாம் சிறையைப்பற்றி பத்திரிகைகளில் செய்திகள் அம்பலமானதும் நிலைமை மேம்பட்டுள்ளதாம். அங்கு ஒரு ஆளுக்கு நாளொன்றுக்கு உணவுக்காக ஒரு ரூபாய் 5 சதம் அனுமதிக்கையில், தலைமன்னர் காவற் கைதிகளுக்கு 73 சதமே உணவுக்காக ஒப்பந்தக்காரருக்குக் கொடுபடுகிறதாம். அவரின்கீழ் மற்ருெரு உப ஒப்பந்தக்காரர். இந்த இருவரும் இதில் லாபம் பிடித்துபோக, எஞ்சியுள்ள பணதுக்கு எவ்வளவு உணவு அங்கு அடைபட்டுள்ளவர்களுக்குக் கிடைக்குமென்பதை சுலபமாக ஊகிக்கலாம்!

(5-ம் பக்கம் பார்க்க)

# காஷ்மீர் விவாதம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது

## பாதுகாப்புச்சபை நடவடிக்கை

### சைப்ரஸ் விவாதம் 24மணிநேரம் பின்போடப்பட்டது

நியுயோர்க், பெப். 18

**ஐ. நா. பாதுகாப்புசபை 20 நிமிடம் கூடிய பின், காஷ்மீர் விவாதத்தைக் காலவரையறையின்றி ஒத்திவைத்தது. இந்திய, பாகிஸ்தான் பிரதிநிதிகள் தத்தம் நாடுகளுக்குத் திரும்புகின்றனர்.**

காஷ்மீர் பிரச்னை விஷயத்தில் சபை அங்கத்தினர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியை பாகிஸ்தான் பிரத்நிதி பூட்டோவும், இந்தியப்பிரதிநிதி திரு. சக்ளாவும் பாராட்டினர்.

ஒத்திவைக்கும் பிரேரணையை மொராக்கோ பிரதிநிதி சமர்ப்பித்தார்.

இந்த ஒத்திவைப்பு காஷ்மீரில் நெருக்கடிநிலை இல்லை என்பதையே காட்டுவதாக இந்தியப் பிரதிநிதி திரு. சக்ளா கூறினர்.

பாகிஸ்தான் என்ன நோக்கத்திற்காகச் சபைக்கு வந்ததோ அதை அடைவதில் தோல்வியுற்றுவிட்டது என்றும் அவர் கூறினார். இனி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கும் சீனப்பிரதமரின் ஆலோசனையை திரு. பூட்டோ நாடலாம் என்றும் அவர் நிருபர்களிடம் கூறினர்.

காஷ்மீர் விவாதத்தில் பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரதிநிதிகள் மேற்கொண்டநிலை குறித்து திரு. சக்ளா அதிருப்தி தெரிவித்தார். பாகிஸ்தான் ஆக்கிரமிப்புபற்றி அமெரிக்கா குறிப்பிடவில்லை என அவர் வருத்தம் தெரிவித்தார்.

பாதுகாப்புசபை இவ்விஷயத்தில் ஒரு உடன்பாடு காணுவதற்கு இந்தியா குற்றவாளி அல்ல என்றும் அவர் கூறினர்.

பாகிஸ்தான் தனது வாதத்தை நிரூபிக்கத் தவறிவிட்டது என்றும் சக்ளா கூறினர்.

சைப்பிரஸ்பற்றிய விவாதத்தையும் சபை 24 மணிநேரம் ஒத்திவைத்தது. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளிடையே தனிப்பட்ட பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிருர்.

## "நல்ல குணவதியே லட்சிய ஸ்திரீ"

ஹாம்பர்க், பெப். 18

மேற்கு ஜெர்மனியர்களில் 54.5 சதவிகிதம் பெண்களே. இவர்களில் 100-க்கு 65 பேர் மணமானவர்கள். ஆனல் 32 சதவிகிதத்தினர் மோதிரம் போட்டுக் கொள்ளாதவர்கள். 100-க்கு 78 பேர் சமையல் செய்வதை விரும்புகிருர்கள். 21 சதவிகிதம் சிகரெட் பிடிக்கிருர்கள். 100-க்கு 62 பேர் தன் பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றனர். 25 சதவிகிதம் பேர் பிறநாட்டு பாஷைகளை அறிந்தவர்கள். 11 சதவிகிதம்பேர் மோட்டார் ஓட்டத்தெரிந்தவர்கள். 100-க்கு 24 பேர் தலைமயிருக்கு சாயம் போடுகின்றனர். 44 பேர் உதட்டுச் சாயம் பூசுகின்றனர். 16 பேர் விளையாட்டுப் பந்தயங்களைக் காணச் செல்கின்றனர். ஒரு பெண் வருடத்திற்கு 17 ஜோடி ஸ்டாக்கிட்ஸ்களை உபயோகிக்கிருள். இது உலக ரிகார்டு. சராசரி அமெரிக்க ஸ்திரீ 16 ஜோடி ஸ்டாக்கிங்ஸ் அணிகிருள்.

சராசரி ஜெர்மன் ஸ்திரீ மணமானவள் 25 குழந்தைகளைப்பெற அவள் பிரியப்பட்டாலும் 1.3 குழந்தைகளைப் பெற்றிருக்கிருள். இவள் அழகு சாதனங்களுக்காக 25ஜெர்மன் மார்க்குகள் (6.25 டாலர்) ஒரு வருடத்தில் செலவழிக்கிருள். பிரெஞ்சு ஸ்திரீகளைவிட அதிக பிரெஞ்சு வாசனைகளை வாங்குகிருள். நகை போட்டுக் கொள்வதிலும் அவளுக்கு ஆசை. 22.3 கோடி ஜெர்மன் மார்க்குகளுக்கு (2கோடி பவுண்களை) நகைகள் 1953-ல் இறக்குமதி செய்யப்பட்டன. ஆனல் 1963-ல் 70 கோடி ஜெர்மன் மார்க்குகளுக்கு தங்க நகைகள், வைரம், முத்துக்கள் ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

8 பேர்களுக்கு ஒருவர் குடும்பப்பொறுப்புள்ளவர்களாக வாழ விரும்புகின்றனர். அவர்களில் முக்கால் பங்கினர் வேலையில்லாத வாழ்க்கை சாரமற்றது என்று கருதுகின்றனர். பிரதானமாக அவர்கள் மதிப்புக் கொடுப்பது குணத்திற்குத்தான். லட்சிய ஸ்திரீ நல்ல குணவதியாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். 12-ல் ஒருவர் அழகாகத் தோற்றமளிக்கவே விரும்புகின்றனர்.

## இரவில் ஞாபகசக்திகுறைவு

ஹாம்பர்க், பெப். 18

இரவுவேளையில்படுத்துக் கொண்டே படிப்பவர்கள் மனதில்விஷயம் எவ்வளவு கிரகிக்கப்படுகிறது என்பது குறித்து இப்போது தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இரவில் நேரம் ஆக ஆக, படிப்பவர்கள் மனதில் படித்த விஷயங்கள் நிலையாக நிற்பதில்லை. 10 மணிக்கு மேல் படிப்பவர்களுக்கு படித்த விஷயத்தில் 52 சத விகிதம்தான் மனதில் நிற்கும். 11 மணிவரை படிப்பவர் மனதில் 27 சத விகிதம் தான் நிற்கும். நடுநிசிக்குப் பிறகு படிப்பவர் படித்த விஷயத்தில் 9 சதவிகிதம் மட்டுமேதான் நினைவில் வைத்திருக்க முடிகிறது. மறுநாள்காலையில் புத்தகத்தில் எந்த இடத்தில் நிறுத்தினேமென்பது கூட அவர்களுக்கு நினைவிருப்பதில்லை.

## பாரிஸ் கடைகளில் சீனப் பொருட்கள்

பாரிஸ், பெப். 18

பாரிஸ் கடைத்தெருக்களில் இப்போது ஏராளமான சீனப்பொருட்கள் விற்பனைக்கிருக்கின்றன. பாரிஸிலுள்ள ஒருபெரிய கடை, ஒரு மாடி முழுவதும் சீனச்சாமான்களைக் குவித்திருக்கிறது.

இருசீனக் கொள்கைபற்றி சீன, பிரெஞ்சு அரசாங்கங்கள் என்ன நினைத்தபோதிலும் இந்தக்கடையில் சீனப் பொருட்கள் ஒருபகுதியிலும் போர்மோஸாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் ஒருபகுதியிலும் தனித்தனியாக நேர்த்தியாக வைக்கப்பட்டிருக்கின்றன.

## ராஜமாதா

லண்டன், பெப். 18

வயிற்றுவலி காரணமாக ஆப்ரேஷன் செய்யப் பட்ட ராஜமாதா எலிஸபெத், 12 தினங்கள் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினர்.

## பலத்த அடி

போபால், பெப். 18

பிரஜா சோஷலிஸ் கட்சியிலிருந்து திரு. அசோக்மேத்தா விலக்கப்பட்டதை ஆட்சேபித்து, மத்திய பிரதேச சட்டசபையில் இக் கட்சியின் தலைவராயிருக்கும் திரு. சந்திரபிரஸாத்தெவாரி தலைமைப் பதவியை ராஜினமாச்செய்துவிட்டார். கட்சியின் நிர்வாகக் கமிட்டியிலிருந்தும் அவர் ராஜினமாச் செய்துவிட்டார். 'அசோக்மேத்தா விலக்கப்பட்டது கட்சிக்குப் பலத்த அடி' என அவர் கூறினர்.

## ஜேக்ரூபி விசாரணை

வாஷிங்டன், பெப். 18

ஒஸ்வால்ட்டைக் கொலை செய்த ஜேக்ரூபியின மீதான விசாரணை நேற்று ஆரம்பமாகியது.

## அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

சைகோன், பெப். 18

சைகோனில் நேற்று அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பலர் காயமடைந்தனர்.

## கொடிகாமம் கொலை வழக்கு எதிரிகள் விடுதலை

சச்சார், செவ்வாய்

வல்லுவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நல்லையா என்பவரை கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட கொடிகாமம் கணபதிப்பிள்ளை குலசேகரம், சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை அல்லது குஞ்சையா, வேலுப்பிள்ளை கனகநாயகம் அல்லது குஞ்சத்தம்பி, தாமோதரம்பிள்ளை வேலுப்பிள்ளை ஆகிய நான்கு எதிரிகளையும் விசாரணையின் பின் சாவகச்சேரி நீதிபதி திரு. பி. ரேபேட் சில்வா விடுதலை செய்தார்.

காலஞ்சென்ற நல்லையா என்பவர் சென்ற ஐப்பசி மாதத்தில் யாழ்ப்பாணம்— கண்டி வீதியில் கொடிகாமத்திலுள்ள பெரியநாவலடி என்னுமிடத்தில் படுகாயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

## 2லட்சம் பேரை கொன்ற வழக்கில் ஹிட்லரின் அதிகாரி

லிம்பர்க், பெப். 18

மனக்கோளாறு நிறைந்த 2 00,000 ஆண், பெண் குழந்தைகளை ஹிட்லர் எவ்வாறு கொன்ருர் என்பது பற்றிய விபரம் இன்று நடைபெறும் வழக்கு விசாரணையில் வெளியாகும்.

மேற்கு ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் லட்சக்கணக்கானேர் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக நடைபெறும் 3-வது வழக்கு விசாரணை இது.

இந்த வழக்குக்கான புலன் விசாரணை பல வருடங்கள் தயாரிக்கப்பட்டன. குற்றவாளிகளாகக்கருதப்பட்ட நால்வரில் ஒருவர் மட்டுமே இப்போது கைவசம் இருக்கிருர்.

நாஜி யுத்தமுயற்சிக்கு இடையூறுயிருந்தார்கள் என்ற காரணத்திற்காக இந்த 2 லட்சம் பேரும் ஹிட்லரின் "ஜீவகாருண்யக் கொலை"க்கு உட்படுத்தப்பட்டார்களாம். இதை நடத்தி வைத்தவர்களில் ஒருவரான டாக்டர் ஹான்ஸ் ஹெபல்மான் ஹிட்லரின் அதிகாரிகளில் ஒருவர். 3,000 குழந்தைகளுட்பட 70,000 மனநோயாளர்களை இவர் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷில்லாங்கில் ஊரடங்கு சட்டம் பிரகடனம்

### துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர்

ஷில்லாங், பெப். 18

ஷில்லாங்கில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பொலிசாருக்கும் ஆத்திரம் கொண்ட ஜனக்கூட்டத்தினருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கொள்ளை, தீ வைத்தல் ஆகிய சம்பவங்கள் நடைபெற்றன. பொலிசார் தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்யும். நிலைமை சமாளிக்க முடியாமலிருந்ததால் மும்முறை துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் இருவர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர்.பொலிசார்பலரும் காயமடைந்தனர். இப்போது ராணுவம் அழைக்கப்பட்டிருக்கிறது. பொலிசாரும், ராணுவத்தினரும் ரோந்து சுற்றி வருகின்றனர்.

## மறுப்பு

புதுடில்லி, பெப். 18

கிழக்கு பாகிஸ்தானிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனர், இந்தியா திரும்ப விரும்பும் இந்தியர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதை நிறுத்தி விட்டார் என்ற செய்தி இங்கு மறுக்கப்பட்டது.

## 26 குழந்தைகள் மூழ்கினர்

கராச்சி, பெப். 18

உல்லாசப் பிரயாணத்திலீடுபட்டிருந்த ஒரு லொறி, சர்கோதா என்றவிடத்திலுள்ள ஏரியொன்றில் வீழ்ந்ததால் அதில் பிரயாணம் செய்த 26 குழந்தைகள் கொல்லப்பட்டனர். 5 வயதுக்கும் 15 வயதுக்குமிடையேயான 35 குழந்தைகள் அதில் பிரயாணம் செய்தனர்.

## பீர் உற்பத்தியில் 2-வது இடம்

பான், பெப். 18

உலகிலேயே பீர் ஏற்றுமதியில் மேற்கு ஜெர்மன் 2-வது ஸ்தானத்தை வகிக்கிறது. சென்ற வருடம் சுமார் 9,50,000 ஹெக்டோ லிட்டர்கள் பீர் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இதில் 34.7 சத விகிதம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், 22.6 சத விகிதம் அமெரிக்காவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அநேக வருடங்களாகவே அயர்லாந்து பீர் எற்றுமதியில் முதன்மை ஸ்தானத்தை வகித்துவருகிறது.

## பிரபல ஜெர்மன் சங்கீதமேதை பால்ஹிண்டெமித் மறைவு

பிராங்க்பர்ட், பெப். 18

பிரபல ஜெர்மன் சங்கீத நிபுணரும், பாட்டுகள் கவனம் செய்வதில் நிபுணருமான பால் ஹிண்டெமித் காலமானதில் சங்கீத உலகம் மாபெரும் நஷ்டத்தை அடைந்துள்ளது. ஸ்விட்ஸர்லாந்திலிருந்து மேற்கு பெர்லினுக்கு சங்கீதக் கச்சேரி செய்ய வந்தபோது பிராங்க்பர்ட்டில் அவர் காலமானர்.

முப்பது வருடங்களுக்கு முன்பே ஆட்போது பிரபலமாக விளங்கிய சங்கீத நிபுணர் வில்ஹெல்ம் பர்ட்வாங்லர் "ஜெர்மன் சங்கீதத்திற்கு பால் ஹிண்டெமித் செய்துள்ள சேவைபோல யாரும் செய்ததில்லை" என்று குறிப்பிட்டார்.

இவர் பாடல்களைக் கவனம் செய்வதில் நிபுணர். நரம்பு சங்கீதக் கருவிகளை கையாள்வதில் மிகவும் வல்லவர். ஆர்செஸ்டிரா கண்டக்டர். திறன் மிக்க எழுத்தாளர். இவ்ருடைய சங்கீத முறைகள் இவர் பெயரைக்கொண்டே அழைக்கப்பட்டன.

பாக் போன்ற பிரபல சங்கீத மேதைகளின் வழியை இவர் பின்பற்றுபவர். இவர் எழுதியுள்ள ஓரங்க அபேரா நாடகங்கள், இவருடைய சங்கீத வழிமுறைகள் தனி பாணியைக் கொண்டவைகள். "ஹார்மனி ஆப்தி ஓர்ல்ட்" என்கிற இவருடைய சங்கீத நூல் சங்கீத முறைபற்றிய சிறந்த வியாக்கியான நூலாகத் திகழ்கிறது. வழிமுறையை உடைக்காமல் வழிமுறை சிறுகச்சிறுக இதில் மாறுகிறது

இவர் எல்லாவித சங்கீத முறைகளையும் நன்கு பயின்ருர். எம்முறையிலும் இவர் தன் சொந்த பாணியைப் புகுத்தத் தவறுவதில்லை. ஒரு பிரபல சங்கீத நிபுணர் ஒருவரின் கேள்விக்கு இவர் பதிலளிக்கையில் அவரவர்கள் அவரவர்களுக்கேற்ற முறையில் சங்கீதத்தை வளர்க்கவேண்டும் என்று கூறினர். இவர் தன் வாழ்நாள் முழுவதுமே தன் சொந்த பாணியையேகையாண்டிருக்கிருர்.

# "மக்கள் விரும்பினுல் நாங்கள் வெளியேறுவோம்"

## வியாபாரிகள் சங்க கூட்டத்தில் உதவி மந்திரி பேச்சு

களுத்துறை, செவ்.

"தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களுக்குப் பொய் வாக்குறுதிகளை கொடுக்க இந்த அரசாங்கம் தயாராயில்லை. எங்கள் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாமல் மக்கள் எங்களை வெளியேற்ற விரும்பினுல் அவர்களின் விருப்பப்படி நாங்கள் வெளியேறுவோம்."

களுத்துறை வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் களுத்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது வர்த்தக உதவிமந்திரியும் மத்துகம எம். பி யுமான திரு. தயா பாஸ்குவேல் மேற்கண்டவாறு கூறினர்

அவர் தொடர்ந்து கூறியதாவது: இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு பிற்போக்குவாதிகள் முயற்சி செய்து வருகிருர்கள். ஆனுல் வேறுஎந்தக் கட்சியும் ஆட்சிக்கு வந்து சுதந்திரக்கட்சியைப் போல் மக்களுக்கு சேவை செய்யாதென திடமாக கூறுகிறேன். தனிப்பட்ட வியாபாரிகளுக்கு எதிராக இந்தஅரசாங்கம் எந்தவிதத்திலும்நடந்து கொள்ளவில்லை வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான எந்த வழிவகைகளையும் நன்ருக ஆராய்ந்த பின் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேம். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக தனிப்பட்ட வியாபாரிகளால் தரப்படும் எவ்வித ஆலோசனைகள்பற்றியும் ஆராய்வோம்.

## மேல்படிப்பிற்காக இங்கிலாந்து சென்ருர்

கொடிகாமம், செவ்.

சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரியின் பழைய மாணவரான திரு. ஏ. செல்வேந்திரன் கடந்தவாரம் மேல்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றுள்ளார்.

கல்கத்தா உயர்தரக்கல்லூரியில் படித்து பி. ஏ.பட்டம் பெற்ற திரு. செல்வேந்திரன் சாவகச்சேரியில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவரான திரு. கே. எட்வேர்ட்டின்புதல்வராவர்.

## ஐ.இ முன்னணியுடன் பேச்சுவார்த்தை

கொழும்பு, செவ்வாய்

அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன் சுதந்திரக்கட்சி, பொது அடிப்படையில் ஐக்கிய இடதுசாரி முன்னணியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும் என்ற பிரேரணையை அடுத்த பாராளுமன்ற கட்சி கூட்டத்தில் கொண்டுவர பிபிலை எம். பி. திரு. டீ. எம். குணசேகரா தீர்மானித்துள்ளார்.

இந்த இரு கட்சிகளுக்கிடையே பொது அடிப்படையில் உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவேண்டுமென்று அவர் வற்புறுத்துவார்.

ஐக்கியதேசியகட்சியை முறியடிக்க வேண்டுமானுல் எல்லா முன்னேற்றக் கட்சிகளும் ஒன்றுபடவேண்டிய அவசியத்தை கடைசியாக நடைபெற்ற பொதுத்தேர்தல் மூலம் அறியலாம் என்று அவர் கொண்டுவரவிருக்கும் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

## "புனித ஸ்தலங்களை ஒப்படைக்கவும்"

கொழும்பு, செவ்வாய்

பழம்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் முக்கிய பௌத்த ஸ்தலங்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கல்விமந்திரியைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானித்துள்ளது.

தற்பொழுது இந்த ஸ்தலங்களில் வழிபாடு செய்வதற்காக இடம் ஒதுக்கப்படவில்லையென்றும் இந்த ஸ்தலங்களை பழம்பொருள் ஆராய்ச்சி நிலையம் அக்கறையுடன் பாதுகாக்கவில்லையென்றும் பௌத்த காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

## வழக்கறிஞருக்கு அஞ்சலி

கச்சாய், செவ்வாய்

சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று கூடியபொழுது, முடிக்குரிய வழக்கறிஞர் திரு. வே. கனகசபை, காலஞ்சென்ற திரு. சாம்சபாபதியின் அகால மரணத்தைப் பற்றியும் சாவகச்சேரி கோர்ட்டிலும் மற்றும் கோர்டுகளிலும் அவர் நாட்டிய திறனையும் பாராட்டிப் பேசி அஞ்சலி செய்தார்.

பதில் நீதிபதி திரு. பிரூபேட் சில்வா தங்கள் அனுதாபத்தை ஸ்ரீமதி சாம்சபாபதிக்கும் பிள்ளைகளுக்கும் அறிவிக்கும்படி கூறினர்.

## 2 லட்சம் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றவாளிகளில் மற்றுமிருவர் இவ்வாரம் மரணமானுர்கள். பிரதான குற்றஞ்சாட்டப்பட்ட டாக்டர் வெர்னர் ஹெய்ட், விசாரணைக்குட்படுவதைவிட சாவதே மேல் என கடந்த வியாழக்கிழமை சிறையிலேயே தூக்கிட்டுத் தற்கொலை புரிந்துகொண்டார். அதற்கு முதல் தினம், மற்றேர் குற்றவாளியான பிரிட்ரிச்டில்மான், கொலோனிலுள்ள 8 மாடிக் கட்டடத்திலிருந்து விழுந்து மாண்டார். இது கொலையா, தற்கொலையா என்பது குறித்து இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

மூன்ருவது குற்றவாளியான டாக்டர் பெர்ன்ஹாட் போர்ட் வைத்தியகாரணத்திற்காக ஜாமீனில் விடப்பட்டிருந்தபோது, டஸல் டார்பிலுள்ள தமது வீட்டிலிருந்து மாயமாய் மறைந்துவிட்டார். அவர் வெளிநாட்டுக்கு ஓடியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதற்கிடையில் ஆஸ்விச் முகாமில் பல லட்சக்கணக்கானேர்கொல்லப்பட்டது குறித்து ஹிட்லரின் முன்னுள அதிகாரிகள் 21 பேர் மீதான விசாரணை நாளை 10-வது வாரமாக நடைபெறுகிறது.

ரஷ்யா மீது ஹிட்லர் படையெடுத்தபோது பின்ஸ்க் என்ற இடத்தில் 5200 யூதர்களைக் கொன்றதாக ஹிட்லரின் இரகசியப் பொலிசார் ஐவர் மீதான மற்றேர் வழக்கு பேர்ணஸ்விக்கில் நடைபெறுகிறது.

இந்த மூன்று வழக்குகளும் ஹிட்லரின் படுகொலை யந்திரம் கையாண்ட மூன்று பிரதான வழிகளை, காஸ் அறையில் தள்ளிக் கொலை செய்தல் ரஷ்ய போர் முனைக்குப் பின்பு தூக்கிவிடுதல், ஜீவகாருண்யக் கொலை ஆகிய வற்றை உலகுக்குத் தெளிவாக அம்பலப்படுத்தும்.

1939-ம் ஆண்டு இந்த "ஜீவகாருண்யக் கொலையை நடத்தும்படியான உத்தரவில் ஹிட்லர் கையெழுத்திட்டார். ஆனுல் போலந்தில் மின்வெட்டுத் தாக்குதலை நடத்தி 2-ம் மகாயுத்தத்தை ஆரம்பித்த திகதியான செப்டம் 1-ம் திகதியை இந்த உத்தரவில் ஹிட்லர் குறித்தார். இதன் படி யுத்தத்திற்கு உபயோகமான வேலைகளைச் செய்யமுடியாத மனநோயாளர்களும் 5 வருடங்களுக்கு மேல் மனநோய் சிகிச்சை நிலையங்களில் இருந்தவர்களும் தீர்த்துக்கட்டப்பட்டனர்.

# சிங்களக் காசோலைகளை திருப்பி அனுப்பதீர்மானம்

## ஆசிரியர் சங்கம் முடிவு

அக்கரைப்பற்று, செவ்.

"தமிழ் ஆசிரியர்கள தமிழ் மொழியிலே சேவை செய்ய வேண்டியவர்கள். இவர்கள் மீது சிங்கள மொழியைத் திணிப்பதற்கு அரசாங்கம் முன் வருவது முற்றிலும் ஜனநாயகத்துக்கு முரணன செயலாகும். கல்வி சம்பந்தமாக பாடசாலைகளுக்கு அனுப்பும் சுற்று நிருபங்கள் எல்லாம சிங்கள மொழியிலேயே இருக்கிறது. கடந்தமாத வேதனம்கூட சிங்கள மொழில் எழுதப்பட்ட காசோலையில்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தமிழ் பேசும் ஆசிரியர்கள் தங்களின் எதிர்காலத்தைப்பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்" என்று அக்கரைபபற்று ஸ்ரீ இராமகிருஷ்ண மகாவித்தியாலய மண்டபத்தில் கிழக்கிலங்கை தமிழாசிரியர் சங்கம் நடத்திய சிங்கள கசோலை எதிர்ப்புக் கூட்டத்தில் பேசுகையில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. எம். சிவநேசராஜா குறிப்பிட்டார். கூட்டத்திற்கு கிழக்கிலங்கை ஆசிரிய சஙகத் தலைவர் ஆசிரிய மணி திரு. கே. எல். இராஜேந்திரம் தலைமை வகித்தார்.

திரு. சிவநேசராஜா மேலும் குறிபபிட்டதாவது:-

தமிழ் பேசும் ஆசிரியர்கள் நிதானமாகவிருந்து தலைமை ஆசிரியர்களுடன் பூரணமாக ஒத்துழைதது சிங்கள மொழியில் எழுதி அனுப்பப்படும் காசோலைகளைத் திருப்பி அனுப்பிவிடவேண்டும். இவ்வியக்கம் மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள ஐந்து கிளைகளிலும் நடத்தி தமிழ்மொழியில் காசோலை அனுப்பவேண்டுமென்று ஆசிரிய சங்கங்கள் எல்லாம் கோரவேண்டும். உரிமைக்காக நியாயமான முறையில் போராட்டம் செய்யவும் பின்நிற்கமாட்டோம். ஆசிரிய சங்கமும் ஒரு தொழில் சங்கம்போன்றதே தவிரவேறு எந்த ஒரு அரசியல் கட்சியின் ஆதரவில் ஒத்துழைப்பிலே இயங்கும் ஒரு ஸ்தாபனமல்ல.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

சிங்கள மொழியில் காசோலை அனுப்பாமல் விளங்கும் மொழியில் காசோலைகள் அனுப்புமாறு மட்டக்களப்பு பிரதேச உதவி வித்தியாதிபதியைக் கிழக்கிலங்கை ஆசிரிய சங்கமும் ஏனைய சங்கங்களும்கேட்டுக்கொள்ளவேண்டும்

சிங்களத்தில் காசோலை எழுதப்பட்டு தமிழ் ஆசிரியர்களுக்கு வந்தால் அதை உடனடியாகத் திருப்பி அனுப்ப வேண்டும். சம்பளப் பட்டியல்கள் தலைமை ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு அனுப்பும் போது தமிழ் மொழியிலேயே தயாரித்து அனுப்பவேண்டும்.

## சாராயம் கடத்தியவருக்கு அபராதம்

கச்சாய், செவ்வாய்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகலிங்கம் ஆறுமுகம், செல்லையா வயித்திலிங்கம், கந்தையா இராசையா ஆகியோர் ஒரு மோட்டார் காரில் 150 போத்தல் சாராயத்தைக் களவாகக் கடத்திச் செல்லும்சமயத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ரத்நாயக்காவும், சார்ஜன்ட் வேலுப்பிள்ளை மகாலிங்கமும் பளை புதுக்காடு சந்திக்கருகாமையில் கைதுசெய்தனர். நேற்று சாவகச்சேரி நீதிபதி திரு. றூபேட் சில்வா முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் சட்டவிரோதமாக 150 போத்தல் சாராயத்தை வைத்திருந்ததாகவும், கடத்தியதாகவும் இவர்கள்மீது தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த பின்பு நீதிபதி ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா ரூபா 200 அபராதம் விதித்தார.




GC/101



## பதில் நீதிபதி

கச்சாய், செவ்வாய்

சாவகச்சேரி நீதிபதி திரு. ஏ. வயித்திலிங்கம் மூன்று கிழமை லீவில் சென்றிருக்கின்றார். அவரின் லீவு காலத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரி கோர்டுகளுக்கு திரு. பி. ரொபேட் சில்வா, பதில் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## மாணவி குத்திக் கொலை

அக்கரைப்பற்று, செவ்

காதலில் ஏற்பட்ட தோல்வியினால், காதலித்த மாணவி பாடசாலையிலிருந்து வீடு திரும்பும் வீதியில் வைத்துக் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட கோரச் சம்பவம் ஒன்று நேற்று கல்லோயாப் பள்ளத்தாக்கில் நிகழ்ந்துள்ளது.

கல்லோயாப் பள்ளத்தாக்கைச் சேர்ந்த எட்டாம் குடியேற்றக் கிராமத்து வாசியான 17 வயதான செல்வி பி. ஜி. புஞ்சமெனிக்கா, ஒன்பதாம் குடியேற்றக் கிராமத்திலுள்ள மகாவித்தியாலயத்தில் எஸ். எஸ். ஸி. வகுப்பில் கல்வி பயின்று வந்தார். நேற்று பாடசாலையிலிருந்து வீடு திரும்பும் வழியில் ஒரு வாலிபனால் வயிற்றில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இதுசம்பந்தமாகக் காலஞ்சென்ற செல்வி புஞ்சமெனிக்காவின் மைத்துனன் எம். உக்குபண்டா கைது செய்யப்பட்டுப் பொலிஸ் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் நடைபெற்ற இடத்தை அம்பாரை மாவட்ட நீதிபதி திரு. அல்விஸ் பார்வையிட்டு விசாரணை நடத்தினர்.

காலஞ்சென்ற செல்வி புஞ்சமெனிக்காவின் தந்தை சாட்சியம் அளிக்கையில், உக்குபண்டா தனது சொந்த மருமகன் என்றும், தனது மகளைத் திருமணம் செய்துகொள்ள ஆசைகொண்டிருந்தார் என்றும், தானும் காலஞ்சென்ற மகளும் விரும்பவில்லையென்றும் மகளுக்குப் பல காதல் கடிதங்களையும் எழுதிப் பதில் கிடைக்காத ஏமாற்றத்தினால்தான் இதைச் செய்திருக்கிறார் என்றும் குறிப்பிட்டார்.

---

## வானொலிநிகழ்ச்சிகள்

### புதன் 19-2-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம், 6-50 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவு, 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 நேயர் விருப்பம், 7-15 பேச்சு, 7-30 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 பேச்சு, 8-45 இஸ்லாமிய கீதம், 9-15 வாய்ப்பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப் பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 மணித்திருநாடு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம்' 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு. 2-40 ஜெய பேரிகை.

மாலை 5-15 புல்லாங்குழல், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-45 இடுக்கண் நாடகம்.

இரவு 8-00 திரைப்பட இசை, 8-30 கோட்டு வாத்தியம், 8-45 குரல் இசை, 9-15 இம்மாதப்பாடல், 9-20 பொன்னொளிர்பாரதம் 9-50 இசை மாலை, 10-00 புல்லாங்குழல்.

## சனசமூகநிலைய கூட்டம்

உடுப்பிட்டி, செவ்

உடுப்பிட்டி நாவலர் சமூக நிலையப் பொதுக் கூட்டம் திரு. வா. சிவப்பர் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. வா. சிவப்பர், உபதலைவர்: திரு. வே. விசுவலிங்கம், செயலாளர்: திரு வே. சுந்தரம், உபசெயலாளர்: திரு. தா. குண்டுமணி, பொருளாளர்: திரு. கா. சின்னப்பு.

8 பேர் கொண்ட நிர்வாகச் சபைக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## பலநோக்க சங்க நிர்வாகிகள்

பனை, செவ்வாய்

பனை-வண்ணாங்கேணி-தம்பகாமம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- திரு. ச. சின்னத்துரை, காரியதரிசி:- திரு. மு. செ. அமரசிங்கம், தனாதிகாரி:- திரு. நா. சோமசுந்தரம், உபதலைவர்:- திரு. வே சின்னத்தம்பு, உப காரியதரிசி:- திரு. இ. சொர்ணலிங்கம்.

நிருவாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் மு. கந்தையா, சி. அப்பையா, நா. அருளம்பலம், க. துரைராசா, வி. வேலுப்பிள்ளை, இ. நடராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## கூட்டுப்பிரார்த்தனை சபை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கூட்டுப்பிரார்த்தனை சபையின் ஐந்தாம் வருடப் பொதுக் கூட்டம் அண்மையில் சபை மன்றத்தில் நடைபெற்றது. அச்சமயம் புதுவருட நிர்வாக சபையினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:-திரு. பொன். சுப்பிரமணியம், உப தலைவர்:- திரு. வே. இராசையா, காரியதரிசி:- திரு. வி. நடராசா, உப காரியதரிசி:- திரு. செ. தங்கராசா, தனாதிகாரி:- திரு. ச. மயில்வாகனம்.

---

## பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தை கூட்டவும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தைக் கூட்டுமாறு நாவாந்துறை சென்' மேரிஸ் சனசமூக நிலையத்தவரும் சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தவரும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவ்வேண்டுகோளில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் மிகவும் இன்றியமையாததால், விரைவில் இச்சங்கத்தைக் கூட்டவேண்டும். இதுவரைகாலமும் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் கூட்டப்படாததையிட்டு மிகவும் வருந்துகிறோம். பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் மூலம் நாம் பல விஷயங்களை எமது பாடசாலைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய இவ்வேளையில், உடனடியாகப் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தைக் கூட்ட வேண்டிய முயற்சியைத் தலைமையாசிரியர்மேற்கொள்ள வேண்டும்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்குள்ள ஏழைகளின் நெஞ்சம் என்ன வேதனைப் படுகிறதோ! அவர்கள் ஏதும் குற்றம் செய்திருப்பின், விசாரித்து அதற்குத்தக்க தண்டனை விதிப்பதே முறை. அப்படியின்றி, அவர்களை உயிருடன் வைத்து இப்படி வதைப்பது மகாபாதகமாகும்.

* * *

முன்னே யுரைத்தால் முகமனே ஒக்கும் இம்மூவுலகுக்கு அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வணா நீயலையோ, உன்னை நினைந்தே கழியுமென் ஆவி கழிந்ததற்பின், என்னை மறக்கப் பெறாய் எம்பிரான் உன்னை வேண்டியதே.

—திருநாவுக்கரசர்.

---

## தேசிய ஒற்றுமை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"தான் செய்ததில் பிழை எதுவும் உண்டா என்றும், எதையும் தான் மறைத்து வைக்க விரும்பவில்லை என்றும், பிரதமர் தெரிவித்தார்."

தேசிய ஒற்றுமை என்ற தலைப்பில் 'டெயிலி நியூஸ் பத்திரிகை (18-2-64) எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தீவிரவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றும் வகையில் நாட்டின் மொழிப் பிரச்னைக்கு தீர்வுகாணச் சந்தர்ப்பம் வந்துள்ளது. அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு சிறுபான்மையினரின் உரிமைகளில் அதிக கவனம் செலுத்துபவர்கள் உட்பட மற்றைய அரசியல்வாதிகளும் ஆதரவு கொடுப்பது நம்பிக்கையை அளிப்பதாக உள்ளது. இதனால் பதினொன்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கை இராச்சியத்தை உருவாக்குவதே தமது இலட்சியமென்றும், நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரும் அவர்கள் சாதி, மதங்களால் வேறுபட்டிருப்பினும் சகோதரர்கள் என்றும் இலங்கையின் முதல் பிரதமர் திரு டி. எஸ். சேனநாயக்கா கண்ட கனவு நீண்ட காலத்தின்பின் நனவாகும் என நம்ப இடமுண்டு. திரு. சேனநாயக்காவின் இலட்சியத்தை நிறைவேற்ற அவரின் சகாக்களோ அல்லது அவருக்குப்பிறகு பதவிக்கு வந்தவர்களோ தவறிவிட்டார்கள். அந்த நல்லுணர்வு மீண்டும் புத்துயிர்பெற்றது நாட்டின் ஒவ்வொரு பொறுப்புள்ள பிரஜைக்கும் ஆறுதலளிப்பதாக இருக்கும். வெவ்வேறு கலாச்சார, சமய வேறுபாடுகள் உள்ளவர்கள் நாட்டில் வாழ்கிறார்கள் என்பதையும், சிறுபான்மையினரின் மொழிக்கு எந்தநாட்டிலும் பெரும்பான்மை அந்தஸ்தைக் கொடுக்க முடியாதென்பதையும், சிறுபான்மையினரின் கலாச்சார, சமூக, பொருளாதார உரிமைகளை எந்தப் பெரும்பான்மைச் சமூகமும் நசுக்க முடியாதென்பதையும், வெவ்வேறு சாதி, சமய பிரிவினராக இருந்தபொழுதிலும் இலங்கையர் என்ற அடிப்படையில் சகலரும் நாகரீகமான முறையில் அமைதியாகவும் ஒற்றுமையுடனும் வாழ்ந்தார்கள் என்பதையும் உணர்ந்துகொண்டாலே முன் கூறிய இலட்சியத்தை நிறைவேற்றி பயனுள்ளதாக்க முடியும்.

நமது நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியே தேசிய ஒற்றுமையை இன்னும் ஊசலாடும் நிலையில் இருக்கவிடமுடியாது என்ற எண்ணத்தை கொண்டுவந்துள்ளது என நம்பவேண்டியுள்ளது. சட்டவிரோதக் குடியேற்ற குற்றச்சாட்டின் பெயரில் பொலிசாரின் கொடுமைகள், உத்தியோக மொழியை அமுல் செய்வதில் ஒருமுகமான ஆட்சி முறை முதலிய சிறுபான்மை மக்களின் சிறு சிறு இன்னல்கள் முடிவடைய வேண்டும். சிறுபான்மையினர் தங்கள் அரசியல் உரிமைகளைப் பெறுவதில் அவசரப்படுத்துவதையும் தவிர்க்கவேண்டும். தேசிய அபிவிருத்தி குறித்து பாகுபா-

டுகள் மறையவேண்டும். தீவிரவாதிகள் செயல்படுவதுபோல நல்லெண்ணமுடையவர்களும் ஏன் திறமையைக்காட்டக்கூடாது?

## அக்கரைப்பற்று கி. ச. தேர்தல்

அக்கரைப்பற்று, திங்.

அக்கரைப்பற்று மத்திய கிராம சபையின் பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 27-ந் திகதி கிழக்குப் பிரதேச தேர்தல் அதிகாரி முன்னிலையில் தாக்கல் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தமாக உள்ள 11 வட்டாரங்களில் முதலாம் வட்டாரம் கல்லோயா அபிவிருத்தி சபையின் அதிகார எல்லைக்குள் இருப்பதனால் இந்த வட்டாரத்துக்கான தேர்தல் இம்முறையும் நடைபெறமாட்டாது. ஏனைய 10 வட்டாரங்களிலும் சுமார் 50 பேர் வரையில் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ஜெர்மனி ஏதாவது செய்யக்கூடும்

கொழும்பு, செவ்வாய்

ஜெர்மன் ஜனநாயக குடியரசின் அரசியல் அந்தஸ்து பற்றி இலங்கை ஆராயுமானால் நாங்களும் அதையிட்டு நிச்சயமாக எதுவும் செய்ய முடியுமென்று மேர்கு ஜெர்மனி தூதராலயத்தை சேர்ந்த ஓர் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் ஜெர்மனிக்குமிடையே ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றம் பற்றி மிகவும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் இதையிட்டு தாங்கள் அவசரப்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

## வியாபாரிகளுக்கு அபராதம்,

கொழும்பு, செவ்வாய்

61-ம், 62-ம் ஆண்டில் வியாபாரிகள் சட்டத்தின்படி நாடெங்கும் நாற்பது வியாபாரிகள் குற்றவாளிகளாக காணப்பட்டுள்ளனர். இந்த நாற்பது வியாபாரிகளுக்கும் 75,450 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒரு வியாபாரிக்கு 20,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதுவே கூடுதலாக விதிக்கப்பட்ட தண்டனையாகும்.

---

## "பிரதேச . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கள மொழி அமுலை எதிர்க்கும் தமிழர்கள் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள். சிங்களத்தை எதிர்ப்பவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்க விருப்பமில்லாதவராக பிரதமர் காணப்படுகிறார்.

விஞ்ஞானத்தை சிங்களத்தில் போதிப்பதற்கான பாடப்புத்தகம் இன்னும் வெளியிடப்படவில்லை. இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்க முயற்சி செய்துவரும் தேசத் துரோகிகளை கண்காணிக்க அரசாங்கத்திற்கு சக்தியில்லை.

வாக்காளர் இடாப்பில் இந்தியர்களின் பெயர்கள் இடம் பெற்றிருப்பதை நாங்கள் பலமுறை சுட்டிக்காட்டினோம். பாக்குநீரிணையைக் கடந்து வந்த சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்கள் பெற்றுள்ளதோடு வாக்காளர் இடாப்பிலும் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளார்கள் இந்தப் பயங்கர நிலையை கட்டுப்படுத்த பிரதமர் என்ன நடவடிக்கை எடுத்தார்.


## வரி விளம்பரம்

### கார் விற்பனைக்கு

2 சிறி 7000 தொடர் மைனர். புது டயர்கள். புதுக் காரின் நிலைமை. 23-2-64 ஞாயிறு பஸ் நிலையத்தருகில் 'பூகன்ஸ்' ஸ்தாபனத்தில் பார்வையிடலாம். பூகன்ஸ், 71, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1972

---

### ஸ்ரீ சரவணபவான் கபே சுன்னாகம்

சுத்தமான—சுவையான—சத்துள்ள சிற்றுண்டி-போசனம்-பானங்கள் கிடைக்கும். 1909

---

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை. வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்பதற்காக வாங்குங்கள் என்றே கூறுகிறோம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. த. பாலசுப்பிரமணியம். அளவெட்டி. 1947


## மரண அறிவித்தல்

### சிவானந்தன்

யாழ்ப்பாண சுகாதார சேவை கூட்டுறவுச் சங்க அங்கத்தவரும் யாழ்ப்பாணம் பொது அரசினர் வைத்தியசாலையில் கடமை புரிபவருமாகிய திரு. கே. அருளம்பலத்தின் மகன் சிவானந்தன் 17-2-64ல் காலமாகி விட்டார். 18-2-64 நண்பகல் கொக்குவில் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. 1975

## மோசடி வழக்கில் எதிரி விடுதலை

திருக்கோணமலை, செவ்.

சுமார் 1 லட்சத்து 37 ஆயிரம் ரூபா பெறுமதியான நெல்லையும் அரிசியையும் மோசடி செய்ததாக தம்பலகாமம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க மனேஜர் ஏ. சுப்பிரமணியம்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு திருக்கோணமலை மாவட்ட நீதிபதி திரு. சிறிமாவன் அமரசிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்பின் எதிரியை நீதிபதி விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

தீர்ப்பளிக்குமுன் நீதிபதி, விவசாயிகளிடமிருந்து தொழிலாளர்மூலமும் கிளார்க்மூலமும் எதிரி நெல்லை வாங்கியதையிட்டு சங்கத்தலைவரோ மற்றவர்களோ ஆட்சேபம் தெரிவிக்கவில்லையென்றும் மனேச்சருக்கு குறிப்பிட்ட வேலை கொடுக்கப்பட்டிருந்தும் குறுக்கு விசாரணையின்போது சங்கத் தலைவர் மனேஜருக்கு குறிப்பிட்ட வேலை கொடுக்கப்படவில்லையென்று கூறியிருக்கிறாரென்றும் கூறினர்.

எதிரியின் சார்பில் திரு. எஸ். நடேசன் கியூ. சி., திரு. என். பத்மநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானர். முடிக்குரியதரப்பில் திரு. எப். சி. பெரேரா ஆஜரானர்.

---

## நீர்கொழும்பு வெற்றி

இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் திருக்கோணமலை சன்ரைஸ் குழுவும், நீர்கொழும்பு ஜூபிடர் குழுவும் திருக்கோணமலை ரைபிள் மைதானத்தில் விளையாடினர். நீர்கொழும்புக்கு 7 கோல்களும் சன்ரைஸ் குழு ஒரு கோலும் போட்டன.

# அரசாங்க வைத்தியர் விவகாரம்

## மந்திரியின் உறுதி

கொழும்பு, செவ். வைத்திய நிபுணர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமா என்பது பற்றி என்ன செய்ய வேண்டும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும் என சுகாதார மந்திரி திரு பதியுதீன்மாமூத் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். அரசாங்க வைத்தியர்களை தனிப்பட்ட முறையில் பயிற்சிக்க அனுமதிப்பதில்லை என்ற உத்தேச திட்டம் பற்றியே இந்த பத்திரிகை நிருபர் மகாநாட்டில் பேசப்பட்டது.

பகுதிநேர வேலை செய்யும் 81 விசேஷ வைத்தியர்களைக் கொண்டே தனிப்பட்ட பயிற்சி என்ற பிரச்னை எழுப்பப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சேவையை விட்டுவிலகினாலும் சுகாதார இலாகாவில் தொடர்ந்து வேலைகள் நடைபெற்றே தீருமெனவும் அவர் தெரிவித்தார். அரசாங்கவைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் 1957-ம் ஆண்டில் தனிப்பட்ட பயிற்சியை ஒழிப்பதற்கு சம்மதம் தெரிவித்தமையால் இனி அவர்கள் தனிப்பட்ட பயிற்சிக்கு அனுமதிக்க வேண்டுமென கேட்க உரிமையற்றவர்கள் எனவும் மந்திரி தெரிவித்தார்.

## பெண் மந்திரி வந்தார்

கொழும்பு, செவ்வாய். ஐக்கிய அராபியக் குடியரசு சமூக விவகார மந்திரி டாக்டர் திருமதி ஹெட்மாட் அபுசாய் இன்று காலை இலங்கை வந்தார்.

## மாணவரை தண்டித்த வழக்கு

### விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன். சுன்னாகத்திலுள்ள ஒரு கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் மாணவரொருவரை அடித்துக் காயப்படுத்தினார் என சுன்னாகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி எப். எச். அத்துறுபான முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். விக்னேஸ்வரமூர்த்தியின் உதவியுடன் திரு ஜிம்மி ராஜரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கணேசலிங்கம் வழக்கை நடத்தினார்.

திரு. வி. செல்வத்துரையின் உதவியுடன் திரு. ஆர். கண்ணுத்துரை எதிரிகள் சார்பில் ஆஜராகினர்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ஆர். ராஜசிங்கம் சாட்சியளிக்கையில்; கடந்தவருடம்அக்டோபர் 13-ந்தேதி தாம் வழக்காளியைப் பரிசோதனை செய்ததாகவும் அவரின் இடது கையிலும் வலது கையிலும் இரு காயங்கள் இருந்ததாகவும், இக் காயங்கள் பிரம்பினால் அடித்து ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

விசாரணை அடுத்த மாதம் 17-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# "பிரதேச சபையினால் தமிழர்கள் அதிகஅதிகாரம் பெறுவார்கள்"

## ராஜரத்ன அபாயச் சங்கு

கொழும்பு, செவ்வாய். "விரைவில் அமுல்செய்யப்படவிருக்கும் பிரதேசசபைகளினால் தமிழர்களுக்கு அதிகஅதிகாரம் வழங்கப்படும் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதனால் அவர்கள் விரும்பியபடி எதையும் செய்வார்கள். ஆதலால் இந்நாட்டிலுள்ள மக்கள் இப்படியான ஒருமாற்றம் ஏற்படுவதையிட்டு மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

'லங்காதீப' என்ற சிங்கள பத்திரிகையில் வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்தின 'நாடு பிரிக்கப்படுகிறது' என்ற கட்டுரை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: மந்திரிகளில் அநேகர் தொடர்ந்து தங்கள் வேலைகளை ஆங்கிலத்தில் செய்துவருகிறார்கள். மந்திரிசபை நிகழ்ச்சிகளெல்லாம் ஆங்கிலத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. சிங்

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

# வைத்திய சுகாதார அதிகாரிக்கு பாராட்டும் பிரியாவிடையும்

யாழ்ப்பாணம், புதன். "மாநகர சபையில் தமிழில் நிர்வாகம் நடைபெற டாக்டர் சிவஞான சுந்தரம் தான் மூலகாரணம். தமிழில் நிர்வாகம் நடைபெற வேண்டும் என்று ஆலோசிக்க முன்பே அவர் குறிப்புகளை, கட்டளைகளை தமிழில் எழுதி எங்களுக்கு வழிகாட்டினார்"

டாக்டர் எஸ். சிவஞான சுந்தரத்திற்கு நேற்று மாலை அளிக்கப்பட்ட பிரியாவிடையின் போது, யாழ் மாநகர சபை அங்கத்தவரும், உதவி மேயருமான திரு. அழகையா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்ற இவ் வைபவத்துக்கு யாழ்ப்பாண மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா தலைமை தாங்கினார்.

திரு. அழகையா தொடர்ந்து கூறியதாவது. குறுகிய காலமாயிருந்தாலும் டாக்டர் சிவஞானசுந்தரம் எல்லோருடனும் நல்ல முறையில் ஒத்துழைத்தார். பத்திர விண்ணப்பங்கள் இதுவரை காலமும் ஆங்கிலத்தில் இருந்து வந்தது. அதை தமிழில் மொழிபெயர்த்து தந்தார். அவர் தமிழுக்கு செய்த சிறந்த சேவை என்றும் எங்களது நினைவிலிருக்கும். அவர் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் மீண்டும் எங்கள் மத்தியிலேயே சட்டவைத்திய அதிகாரியாக கடமையாற்றப் போகிறார் என்று அறிந்து மிக்கமகிழ் வடைகிறேன். அவர் எங்கு சென்றாலும் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் சிறந்த தொண்டாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஜி வி. எம். எம். அபுசாலி பேசும்போது எங்களை தற்பொழுது விட்டுப் பிரிந்தாலும் அவர் எங்கள் மத்தியில் கடமையாற்றப் போகிறார் என்றும், அவர் தமிழுக்கு செய்த சேவை மறக்க முடியாதென்றும் கூறினர்.

மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா ஆங்கிலத்தில் பேசும் போது யாழ்ப்பாணத்தில் கடந்த பல வருடங்களாக கடமையாற்றிய வைத்திய அதிகாரிகளில் இவர் மட்டுமே பிரமச்சாரியாக இருக்கிறாரென்றும், அவர் தமிழ் சமூகத்திற்கு தொண்டாற்றி வருகிறரென்றும், 'நந்தி'என்ற புனைப்பெயரில் அநேக சிறு கதைகளையும் கட்டுரைகளையம் எழுதி தமிழ் மொழிக்கு சேவை செய்து வருகிறாரென்றும் கூறினர்.

டாக்டர் சிவஞான சுந்தரம் பேசும் போது கூறியதாவது:

இப்பிரியாவிடையின்போது பலர் என்னை வானளாவப் புகழ்ந்தார்கள். அதுசம்பிரதாயப்படியல்ல அன்பினால் தான். நான் எல்லோரையும் நேசித்தேன். எல்லோரும் என்னை நேசித்தார்கள். நான் வேலை செய்த இடங்களிலெல்லாம் எனக்கு அளித்த பிரியாவிடையை ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். அதே போல் நீங்கள அளித்த பிரியாவிடையையும் மறக்கமாட்டேன்.

மாநகரசபை ஆணையாளர் திரு. ஜெயசிங்கா சுகாதார இன்ஸ்பெக்டர் திரு.தங்கையா ஆகியோரும் பேசினர்கள்.

## தமிழரசு . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

இப்பேச்சுவார்த்தைகளுக்கானநல்லெண்ண சூழ்நிலையை ஏற்படுத்தும் பொருட்டு நேரடி நடவடிக்கையை ஒத்திவைக்க தமிழரசுக்கட்சியினர் ஒப்புக் கொண்டபோது தமிழ்ப்பகுதிகளில் சிங்களம் தீவிரமாகத் திணிக்கப்படுவதையும் நிறுத்த வேண்டுமென்று கோரியதாகவும் இதற்கு இணங்கவே நிதிமந்திரி இப்பொழுது 'நியாயமான தமிழ்மொழி உபயோகம்' பற்றி உத்தரவிட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## நியாயமான . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் தலைவர்கள் சிலருக்குமிடையில் ஆரம்ப பேச்சுவார்த்தைகள் தொடங்கியுள்ளன. இப்பிரச்னையை கட்சி அடிப்படைக்கு அப்பால் வைத்துத் தீர்த்துக்கொள்வதற்கு அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. தமிழ் மொழி (விசேஷ சலுகைகள்) சட்டத்தை எவ்விதம் அமுல் செய்வதென்பதுபற்றியும் அண்மையில் மந்திரிகளும் பல கட்சித் தலைவர்களும் சந்தித்தபோது ஆராய்ந்தனர்.

## புதிய தபால் கந்தோர் கட்டடம்

சாவகச்சேரி, செவ்வாய். பல வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட பழைய கட்டடமொன்றில் இயங்கி வந்த தபால் கந்தோர் இடிக்கப்பட்டு அதே இடத்தில் அரை லட்சம் ரூபா செலவில் புதிய தபால்கந்தோர் கட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கொண்ட முயற்சியால் இப் புதிய கட்டடம் கட்டப்பட்டதாக அறியப்படுகிறது.

## மாணவர் அதிருப்தி

யாழ்ப்பாணம், புதன். வர்த்தக ஆசிரியர் விசேட பயிற்சி இம்முறை முதன் முதலாக தமிழில் நடத்தப்பட விருப்பினும், அப்பயிற்சிக்கு மாணவர்களை அனுமதிக்கும் பிரவேசப் பரீட்சையில் முக்கிய பாடமான வர்த்தகம் ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமே நடைபெறுமென சென்ற வெள்ளியன்று வெளியான அரசாங்க வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் வர்த்தக மாணவர்களிடையே பெரும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் அளித்துள்ளது.

# மரண அறிவித்தல்

## சீதாலட்சுமி

திரு. நீ. இராசதுரையின் மனைவியும் காலம்சென்ற டாக்டர் ராஜலிங்கம், றேட் அன்ருன்ஸ்போட் நிர்வாக அதிபர் சத்தியநாதன், இலங்கை காப்புறுதிச் சங்கத்தைச் சேர்ந்த சிவநாதன், இலங்கை உருக்கு சங்கத்தின் உதவி அக்கௌண்டன்ட் வரேந்திரன் ஆகியோரின் தாயாராகிய சீதாலட்சுமி காலமாகிவிட்டார். யாழ்ப்பாணம், கண்டி றேட், 51-ம் இலக்க இல்லத்திலிருந்து புதன்கிழமை காலை 10 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

1974

# மரண அறிவித்தல்

## கே. எஸ். கார்த்திகேசு

கொடிகாமம் ஸ்ரீ கிருஷ்ண விலாஸ் சொந்தக்காரரும் சாவகச்சேரி கிராமச்சங்க அங்கத்தவருமான கே. எஸ். கார்த்திகேசு நேற்று (18-2-64) பிற்பகல் 2 மணிக்கு காலமாகிவிட்டார். இவர் ராசம்மாவின் அருமைக்கணவரும் சௌபாக்கியவதி,பஞ்சலிங்கம், விஞ்ஞானலிங்கம், சுலோசனதேவி ஆகியோரின் தந்தையுமாவர். பூதவுடல் இன்றுபிற்பகல்2 மணிக்கு கொடிகாமம் கட்டைபறிச்சான் மயானத்தில் தகனம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும்.

அறிவிப்பவர் ஆ. கனகு.
(ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ் மனேஜர்)

கிரிக்கெட்

## இந்தியா 146—4

கான்பூர், பெப். 18. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இங்கு நடைபெறும் இறுதி டெஸ்ட் ஆட்டத்தின் மூன்ருவது நாளான இன்று இந்திய கோஷ்டி 4 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 146 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் 8 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 554 ஓட்டங்கள் எடுத்தது.

## பாகிஸ்தானில் சூ-என்-லாய்

ராவல்பிண்டி, பெப். 18. சீனப்பிரதமர் திரு. சூ-என்லாய் தமது பர்மா விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று பாகிஸ்தான் வந்துசேர்ந்தார் இங்கு அவர் எட்டு நாட்கள் தங்கியிருப்பார்.

## "அத்துமீறினால் சுட்டு வீழ்த்துவோம்"

### கிரீஸ் எச்சரிக்கை

ஏதன்ஸ், பெப். 18. எங்களது விமான பிராந்தியம் மீதாக அத்துமீறி பறக்கும் எந்த விமானங்களையும் சுட்டுத்தள்ளுவோம் என்று கிரீஸ் எச்சரிக்கை செய்துள்ளது. விமான பிராந்தியத்தின் மீதாக பறக்கும் விமானங்கள் சுடப்படுமென்று கிரீஸ் அரசாங்கம் சகல அயல் நாடுகளுக்கும் அறிவித்துள்ளது.

## சூ கோஷ்டியில் 48 பேர்

கொழும்பு, செவ்வாய். சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் வருகிற 26 ம் திகதி 48 பேரடங்கிய தூதுகோஷ்டியுடன் கொழும்பு வருகிறார்.

3-வது மகத்தான வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (ஹட்டன்)
நிந்தாவூர் சினிமா (நிந்தாவூர்)
எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி
எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி ரி. எஸ். சரோஜா, சம்பந்தம்
மற்றும் பலர் நடிக்கும்

மொடர்ன் தியேட்டர்ஸ்
காட்டு ரோஜா
இசை: கே. வி. மகாதேவன்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — அஞ்சலிதேவி நடித்த
சர்வாதிகாரி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்-1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது